<u>2026 மார்ச் மாதம் 12– ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 28/2022</u>

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12– ஆம் தேதி வியாழக்கிழமை

திரு.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – செல்வேந்திரன் |
| தகப்பனார் பெயர்: | கருணாநிதி |
| ஊர்: | குள்ளப்பக்கவுண்டன்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 52 |

12.03.2026

(2, 4, 5, 8 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1, 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், குள்ளப்பக்கவுண்டன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த எனது தம்பி ரஞ்சித்குமார், மதுரையை சேர்ந்த பாண்டியன் மனைவி ராஜகாந்தம் என்பவரிடம் அவருக்கு சொந்தமான கே.ஜி.பட்டியிலிருந்து சுருளியாறு

மின்நிலையம் செல்லும் ரோட்டில் உள்ள 10 குழி தென்னந்தோப்பினை கிரையம் பெற்று, மேலும் அவருடைய 20 குழி தென்னந்தோப்பினை 3 வருட குத்தகைக்கு பேசி, ரூ.3,30,000/– ஒரு வருட குத்தகை பணத்தை ராஜகாந்தம் பெற்றுக்கொண்டு, 15.11.2019 ம் தேதி எனது தம்பி ரஞ்சித்குமாரிடம் ஒப்படைத்துவிட்டார்.

2. 16.11.2019 ம் தேதி சுமார் காலை 6.00 மணியளவில் நானும், எனது தம்பி ரஞ்சித்குமார் மற்றும் எனது தந்தை கருணாநிதி ஆகியோர்கள் குணசேகரன் மகன் விசாகரின் டிராக்டரை வைத்து சுருளியாறு மின்நிலையம் சாலையில் உள்ள தென்னந்தோப்பில் உழவு செய்துக்கொண்டிருந்தோம். அப்போது முருகன், கொடியன், கொடியழகன் ஆகியோர் தோட்டவேலை செய்துக்கொண்டிருந்தார்கள். சுமார் 10.00 மணியளவில் பாண்டியன் மகன் விஜயன், நற்குணம் மகன் பாண்டியன், ராஜா மகன் ஜெயப்பிரபு, வீரணன் மகன் மதன், கே.எம்.பட்டியை சேர்ந்த தவசி, அவரது தாயார் ஜோதியம்மாள் மற்றும் அடையாளம் தெரிந்த போதுராஜா, அரசு ஆகியோர்கள் இரண்டு கார்களில் வந்து இறங்கி, நாங்கள் உழுதுக்கொண்டிருந்த தோட்டத்திற்குள் அத்துமீறி நுழைந்து, எங்களை தேவுடியா மகனே என்று அசிங்கமாக பேசிக்கொண்டே எங்களிடம் வந்தார்கள். பாண்டியன் மகன் விஜயனும், நற்குணம் மகன் பாண்டியனும் தென்னை மட்டையை எடுத்து என்னை அடித்து எனது இரு கைகளையும் பிடித்துக்கொண்டு அவனை வெட்டிக் கொள்ளுங்கடா என்று சொன்னார்கள்.

3. அதைப் பார்த்த ஜெயபிரபுவும், மதனும் அவரவர் வைத்திருந்த அரிவாளை கொண்டு என்னை வெட்டினார்கள். ஜெயபிரபு எனது வலது தோள்பட்டையில் வெட்டினார், இத்துடன் தொலைந்து செத்துப்போ என்று கூறிக்கொண்டே என்னை வெட்டினார். மதன் அவர் வைத்திருந்த அரிவாளை வைத்து இத்துடன் செத்துப்போ என்று கூறிக்கொண்டே வெட்டினார், அதில் எனக்கு இடது மோதிர விரலில் இரத்தக்காயம் ஏற்பட்டது. நான்

நிலைக்குலைந்து கீழே விழுகவும், தவசி, தவசி தாயார் ஜோதியம்மாள், அரசு, போதுராஜா ஆகியோர்கள் தென்னை மட்டையை எடுத்து என்னை மாறி மாறி அடித்ததில் எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது.

4. அதைப் பார்த்த எனது தம்பி ரஞ்சித்குமார், கருணாநிதி, விசாகர், முருகன், கொடியழகன், கொடியன் ஆகியோர் வந்து, சண்டையை விலக்கிவிட்டு என்னை அவர்களிடமிருந்து காப்பாற்றி 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து, என்னை 108 ஆம்புலன்ஸில் ஏற்றி கம்பம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தார்கள். அதன்பின்பு கூடலூர் தெற்கு காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் நான் உள்நோயாளியாக இருந்தபோது என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார். நான் நடந்த சம்பவத்தை சொல்ல சொல்ல சிறப்பு சார்பு ஆய்வாளர் எழுதிக்கொண்டார்.

5. அதை படித்துக் காண்பித்தார். நான் சொன்னவாறு எழுதப்பட்டிருந்ததால் அதை புரிந்துக்கொண்டு நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான், அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் மரப்பிடியுடன் கூடிய இரும்பு அரிவாள் இரண்டு, எதிரிகள் என்னை தாக்க பயன்படுத்திய அரிவாள்கள் தான். அது **சா.பொ.1** மற்றும் **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

6. ராஜகாந்தம் என்பவர் தற்போது எங்கு இருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. ராஜகாந்தத்திற்கு பாத்தியப்பட்ட தென்னந்தோப்பை தான் நான் கிரையம் மற்றும் ஒத்திக்கு வாங்கியுள்ளேன் என்றால் என் தம்பி வாங்கியுள்ளார். கிரைய ஒப்பந்தம் எத்தனை மாதங்களுக்கு போடப்பட்டது என்றால் 3 மாதங்களுக்குள் கிரையம் முடிக்க வேண்டும் என்று ஒப்பந்தம் போடப்பட்டது.

3 மாதங்களுக்குள் கிரையம் முடிக்கப்பட்டதா என்றால் அதற்குள் என் தம்பி இரஞ்சித்குமார் கூலிப்படையினரால் கொலை செய்யப்பட்டுவிட்டார்.

7. 06.03.2020ம் தேதி எனது தம்பி கொலை செய்த சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கும் இந்நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த வழக்கில் 1வது எதிரி விஜயன் மேற்படி கொலை வழக்கிலும் எதிரியாக இருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அனைத்து எதிரிகளுக்கும் தண்டனை வழங்கப்பட்டது என்றால் 8 எதிரிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. மேல்முறையீடு வழக்கில் 1வது எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்றால் சரிதான், அந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளோம். 1வது எதிரி விஜயன் மதுரையில் நிரந்தர வசித்து வருகிறார் என்றால் மதுரையில் உள்ளார், ஆனால் நிரந்தரமாக உள்ளாரா என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் 1வது எதிரி சாட்சி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தத்தை ஏற்றுதல் ஆற்றுக பரிகோரம் கோரி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

9. மேற்படி உரிமையியல் வழக்கில் 1வது எதிரி தரப்பினரா என்றால் இல்லை. நான் சொல்லும் தென்னந்தோப்பு சொத்திற்கும் 1வது எதிரிக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும், வழக்கிற்காக அவரை சேர்த்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 1வது எதிரி என்னை தென்னை மட்டையை கொண்டு அடிக்கவில்லை என்றால் சரியல்ல. தென்னை மட்டையை வைத்து 1வது எதிரி என்னை அடித்ததால் எனக்கு எந்த இடத்தில் காயம்பட்டது என்றால் உடல் முழுவதும் ஊமைக்காயங்கள் ஏற்பட்டது. மருத்துவமனையில் உள்நோயாளியாக

இருந்தேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் எனக்கு ஏற்பட்ட ஊமைக்காயங்களை காட்டினேன் என்றால் காட்டினேன், சொன்னேன்.

10. நிலத்தை யார் உழுதார்கள் என்றால் வாடகை டிராக்டரை கொண்டு முருகன் என்பவர் உழுதுக்கொண்டிருந்தார். ரஞ்சித்குமாருக்கும், எதிரி ஜெயபிரபுவிற்கும் தான் பிரச்சனை என்றாலும், 1வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல, ராஜகாந்தம் என்பவரின் மகன் விஜயன் என்பதால் அவர் தான் எதிரிகளை அழைத்து வந்து சம்பவ தேதியில் பிரச்சனை செய்தார். 1வது எதிரியை சேர்த்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2, 4 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – 2, 4 முதல் 8 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.03.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.12 17:43:36 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
12.03.2026